**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**Spl. C.No.1/2019**
**Prosecution Witness P.W. 35**

.....

Name : திரு. தங்கசாமி    Calling : Addl. Sudt. Of Police (Rtd.)

Father's name : திரு. பூமிநாதன்    Religion : --

Village : முக்கூடல்    Age : 65/2006

Taluk : சேரன்மகாதேவு

நாள் - **01.04.2026.**

**(1 ம் எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2 ம் எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தமிழ்நாடு காவல்துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி கடந்த 2019 ம் வருடம் ஓய்வு பெற்று, தற்போது திருநெல்வேலி மாவட்டம் முக்கூடல் கிராமத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2012 ம் வருடம் நான் திருநெல்வேலி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணியாற்றிய போது, கடந்த 09.02.2012 ம் தேதி ஊழல் தடுப்பு இயக்குநர் அலுவலகத்தில் இருந்து, மதுரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் குற்ற எண்.2/2012 பிரிவு 13(2) உ/இ 13(1) (E) PC Act படி வழக்கில் மதுரை துணைகண்காணிப்பாளர் அவர்களுக்கு உதவியாக இருக்குமாறு, அறிவுரை நமுனா வழங்கப்பட்டது. அதனடிப்படையில் நான் காவலர்களிடம் மதுரை ஊழல் தடுப்பு அலுவலகத்தில் அறிக்கை செய்தேன். 10.02.2012 ம் தேதி காலை 6.15 மணியளவில் துணைகண்காணிப்பாளர், திருமதி. கலாவதி அவர்கள் மேற்குறிப்பிட்ட முதல்தகவல்அறிக்கையின் நகல் மற்றும் பிரிவு 166 குவிமுச-வின்படி மேற்படி குற்றவழக்கில் கண்ட எதிரி வீட்டினை சோதனை செய்வதற்கு உள்ள அறிக்கையை எனக்கு அளித்தார், நான் அதனை படித்து பார்த்தேன். அதன்பின்பு மேற்படி சோதனை செய்வதற்கு உதவியாக வருகை தந்திருந்த அரசு சாட்சிகள் விஜயகுமார், நாகராஜன், அழகுநாச்சியார் அவர்களுடன் புறப்பட்டு மேற்படி எதிரி குடியிருந்த நம்பர் 2/1137, சாமுண்டி தெரு, கண்ணனேந்தல் என்ற முகவரிக்கு சென்று விசாரணை மேற்கொண்டேன். வீட்டில்

மேற்படி வழக்கின் எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ள திருமதி. தமிழரசி என்பவர் மற்றும் அவரது கணவர் திரு. ரவிக்குமார் குழந்தைகள் ஆகியோர் வீட்டில் இருந்தனர். அப்போது மணி காலை 07.00 ஆகும். நான் முதல்தகவல்அறிக்கையின் நகல் மற்றும் சோதனை செய்வதற்காக எனக்கு அளிக்கப்பட்ட நமுனாக ஆகியவற்றை திருமதி. தமிழரசி அவர்களிடம் கொடுத்து படிக்கக் கூறி அவரிடம் ஒப்புதல் பெற்றேன். அதன்பின்னர் சாட்சிகள் முன்னிலையில் வீட்டை சோதனை செய்த போது, தங்கநகைகள் 12 மற்றும் வெள்ளி நகைகள் 4 ஆகிய பொருட்கள் இருந்தது. சோதனை முடிவில் வீட்டில் கிடைக்கப் பெற்ற ஆவணங்கள் 24 வழக்கின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அவற்றில் TN 59 AD 2229 வாகனத்திற்குரிய ஆர்.சி புக்கும் உள்ளடங்கியது ஆகும். மேற்படி சோதனை காலை 10.10 மணிக்கு நிறைவு பெற்றது. நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஒரு மகஜர் என்னால் தயார் செய்யப்பட்டு, அது திருமதி. தமிழரசி அவர்களிடம் ஒரு நகல் வழங்கப்பட்டு அவரின் கையொப்பமும் பெறப்பட்டது. மேற்படி மகஜரில் அரசு சாட்சிகள் நாகராஜன், விஜயகுமார், அழகுநாச்சியார் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். சோதனை ஜாபிதா மற்றும் மகஜரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களை அறிக்கையுடன் திருமதி. கலாவதி அவர்களிடம் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக என்னை காவல்ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சோதனை செய்வது சம்பந்தமாக முதல்முதலில் எப்போது தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் இரவு 9.00 மணியளவில் தெரிவிக்கப்பட்டது. காலை 6.00 மணிக்கு நான் திருநெல்வேலியில் இருந்து மதுரைக்கு வந்து, மதுரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு அலுவலகத்திற்கு சென்று, 166 குவிமுச படி உத்தரவை பெற்றேன். என்னிடம் சார்பு செய்யப்பட்டதை நான் பெற்றுக் கொண்டதற்கு எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மேலதிகாரி தென்சரக காவல்துறை கண்காணிப்பாளர் ஆவார். மேற்படி சோதனை சம்பந்தமாக என்னுடைய மேலதிகாரியிடம் எழுத்துபூர்வமான உத்தரவை பெற்று தான் சோதனை சென்றேன். அந்த எழுத்துபூர்வமான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழககில் வீடை

சோதனை செய்வதற்கு நீதிமன்றத்தில் சோதனை வாரண்ட் எதுவும் பிறப்பிக்கப்பட்டதா என்றால் எனக்கு வழங்கப்பட்ட 166 குவிமுச வில் கண்ட உத்தரவில் மேற்படி சோதனை செய்வதற்கு நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறுவதற்கு போதிய அவகாசம் இல்லை என்பதனால் முன்அறிவிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த முன்அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை, பின்னிட்டும் பார்க்கவில்லை. நான், அரசு சாட்சிகள் 3 பேர், காவல்துறை அலுவலர்கள் 4 பேர்கள் ஆகியோர் சோதனைக்கு சென்றோம். மகஜரில் காவல்துறையை சேர்ந்தவர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மகஜரில் காவல்துறை அலுவலர்கள் யார் யார் வந்தார்கள் என்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல, மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலை சுமார் 6.30 மணிக்கு சென்றோம். எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட வாகனத்தில் சென்றோம். திருநெல்வேலி அலுவலகத்தில் இருந்து 10.02.2012 ம் தேதி காலை 3.00 மணிக்கு கிளம்பினோம். அரசு அலுவலர்களை நான் அழைக்கவில்லை. யார் அழைத்தார்கள், எப்போது அழைத்தார்கள் என்பது பற்றி நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. அரசு அலுவலர்களை சோதனைக்கு வரவழைப்பது சம்பந்தமாக எந்தவிதமான எழுத்துபூர்வமான உத்தரவுகளையும் நான் பார்க்கவில்லை. வீட்டில் இருந்த வேறு நபர்களிடம் கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை. எந்த பிரிவின் கீழ் சோதனை செய்வதாக மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, சோதனை ஜாபிதாவில் தொடர்ச்சி தான் மகஜர் என்பதால் தனியாக குறிப்பிடப்படவில்லை. பிரிவு 103 குறித்து எனக்கு எதுவும் தெரியாது. பிரிவு 103ன் கீழ் நான் சோதனை செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சென்ற வீட்டிற்கு அருகில் நிறையவீடுகள் உள்ளது என்றால் சரிதான். மக்களும் அங்கு சுற்றி இருந்தார்கள். அவர்கள் யாரையாவது சாட்சியாக இருக்க சொன்னேனா என்றால் இல்லை. நான் கைப்பற்றிய 24 ஆவணங்களையும் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. அந்த ஆவணங்கள் சம்பந்தமாகவோ, பொருட்கள் சம்பந்தமாகவோ வேறு நபர்களை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் நகை மதிப்பீட்டாளர் யாரும் வரவில்லை என்றால் சரிதான். நகைகளின் மதிப்பீடு எதுவும் குறிப்பிட்டு

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.4 ல் உள்ள விபரங்கள் அதில் கையெழுத்து செய்த நபரிடம் தெரிவிக்கப்பட்டு, விபரங்கள் சேகரிக்கப்பட்டதாக சொல்லி அவரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் அதுமாதிரி எழுதப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர்கள் முன்னிலையில் ஒவ்வொரு பொருட்களும் அவரிடம் விளக்கம் கேட்டே மகஜரில் எழுதப்பட்டது. எதிரியிடம் கையொப்பம் பெற்ற போது, நகல் பெற்றுக் கொண்டேன் என்று மட்டும் தான் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். லஞ்ச ஒழிப்பு போலிசாரால் நாங்கள் வரவழைக்கப்படவில்லை என்றும், நான் சொல்வதுபோல் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எந்தவித சோதனையும் நடத்தப்படவில்லை என்றும், என் முன்னிலையில் எந்த ஒரு ஆவணங்களோ, நகைககளோ கைப்பற்றப்படவில்லை என்றும், நான் எந்த மகஜரையும் தயார் செய்யவில்லைஎன்றும் சொன்னால் சரியல்ல. பின்னிட்டு லஞ்ச ஒழிப்பு போலிசார் தயார் செய்து வைத்த ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. லஞ்ச ஒழிப்பு போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

1 ம் எதிரி தரப்பில் மேற்படி 2 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சுருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.04.02 10:14:17 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.